ISSN : 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed

UGC CARE LIST

UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India

Volume : 07, Issue : 01/02 - March 2023

# இல்லறத்தில் விருந்து : திருக்குறளும் திருவிவிலியமும்

**ஆய்வாளர்,**

**ந.ஆ. வேளாங்கண்ணி ,**

*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*

*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,*

*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),*

*திருப்பத்தூர் – 635 601, திருப்பத்தூர் மாவட்டம்.*

## முன்னுரை

*சங்ககாலச் சான்றோர் வாழ்க்கையை அகம், புறம் என்று பிரித்தனர். அக வாழ்க்கை களவு, கற்பு என்று பிரிக்கப்பட்டது. இவற்றைத் தவிர மற்ற வாழ்வியல் கூறுகளைப் புறம் என்று அழைத்தனர். இந்த இரண்டிலும் அறங்கள் சிறந்து விளங்கின. இல்லறத்தில் கணவன், மனைவி தம் மக்களோடு இன்பமாகவும் அறத்தோடும் வாழ வேண்டுமென்றால் இவர்களுக்கென்று சில கடமைகளும் நல்ல பண்புகளும் உள்ளன. அவற்றில் 'விருந்தோம்பல்' என்ற அறப்பண்பு கடமையாகவும் அடிப்படையாகவும் இருத்தல் அவசியம் எனத் திருக்குறள், திருவிவிலியம் ஆகிய இரு நூல்கள் வலியுறுத்துகின்றன. ஆகவே, விருந்தோம்பல் என்பதன் பொருள்? விருந்தோம்புலுக்கான காரணம், விருந்தோம்பும் முறை, விருந்தோம்பலின் பலன் மற்றும் விருந்தோம்பலின் இன்றைய நிலை குறித்து ஆராய்கிறது.*

## இல்லறத்தின் இலக்கணம்

அறப்பாதையில் இரண்டு இதயங்கள் (ஆண், பெண்) கூடி வாழும் இடம் இல்லம் எனப்படும். பெண் என்பவள் வீட்டை ஆள்பவள். அதனால்தான் தமிழ் மொழி அவளை 'இல்லாள்' என்கிறது. ஆணுக்கு அந்தச் சிறப்பைத் தரவில்லை. இல்லான் என்றால் வறியவன் என்று பொருள்படும். அதனால்தான் அவனை இல்லான் என்று கூறவில்லை. இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை என்ற வாழ்க்கையின் இரகசியத்தை உணர்ந்தவர்கள் இந்தியர்கள். 'இல்லறம்' என்பது கற்புடைய மனைவியோடு இல்லின்கண் இருந்து செய்யும் அறம் என்கிறார் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். ஒத்த அன்புடைய ஓர் ஆணும் பெண்ணும் அறத்துடன் கூடி வாழும் வாழ்க்கை இல்லறம் எனப்படும். இதனையே திருவள்ளுவர் **"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை"**[1] என்கின்றார். சிறந்த மனைவி இல்லாமல் வாழும் வீடு 'ஒரு காடு' என்கிறது நாலடியார். கடவுள் **"ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கிப் பல்கிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்"**[2] என்றார். மேலும் **"கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்"**[3] என்று திருவிவிலியம் முன்வைக்கிறது. இல்லறம் என்பது நேற்றோ இன்றோ முளைத்த காளான் அல்ல. மாறாக காலம் காலமாகப் பரந்து, விரிந்து, வளர்ந்து, தலைமுறை தலைமுறையாக விழுதுகளைத் தரும் ஆலமரம் போன்றது.

**உணவும் விருந்தும்**

'உணவு', 'விருந்து' என்ற இரண்டு சொற்கள் தமிழ் மரபில் காணப்படுகின்றன. இரண்டுமே உணவைக் குறித்தாலும் இந்த இரண்டு சொற்களுக்குச் சற்று வேறுபாடு உண்டு. உணவு என்பது மனித வாழ்விற்கு இன்றியமையாத தேவையாக உள்ளது. உணவில்லையெனில் மனித இனம் மட்டுமன்றி எந்த ஓர் உயிரினமும் உயிர் வாழ இயலாது. உணவு பசிக்கு உண்பது, தனித்தும் உண்ணலாம். உணவு இல்லை என்றால் உடலும் உடலில் உள்ள உயிரும் அழிந்து விடும். ஆனால், விருந்து என்பதைச் சேர்ந்து உண்பது. பிறரோடு பகிர்ந்து உண்பது எனலாம். இதனால் மனித உறவுகள் வலுவடைகிறது. இல்லறத்தில் விருந்தளித்து மகிழ்வது ஒரு சுவையான அனுபவமாகக் கருதப்படுகிறது. **"விருந்தளித்து மகிழ்வது மனித இனத்திற்கு மட்டுமல்ல பறவை இனத்திற்கும் உரியது"**[4] என்பார் இந்தியாவின் பறவையியல் வல்லுநர் சலீம் அலி. வேடன் பிடியில் அகப்பட்ட பெண்புறா ஒன்று தன் ஆண் புறாவிடம் அவனுக்கு விருந்தோம்பச் சொல்லியது. அதற்காகத் தன் உயிரையே மாய்த்தது ஆண்புறா. இவ்வாறு வேடனுக்கு உணவானதைக் கம்பராமாயண யுத்த காண்டம் விளம்புகிறது. ஐந்தறிவுடைய பறவை இனமே விருந்தோம்பும் இல்லறக் கடமையை நழுவாமல் செய்கிறது என்பதை அறியமுடிகிறது.

**"விருந்து என்னும் சொல்லுக்கு புதுமை என்பதே பொருள். எனவே முற்றிலும் புதியவராகத் தம்மிடம் வந்தோரைப் பேணுதலையே விருந்தோம்பல் என்று தமிழர் கருதியமை புலப்படும்"**[5] என்று அ. தட்சிணாமூர்த்தி முன்வைக்கிறார். பொதுவாக விருந்தினர்களை இருவகையாகப் பிரிக்கலாம். 1. நமக்கு முன்பே அறிமுகமானவர்கள், 2. நமக்கு அறிமுகமாகாதவர்கள். முதல் நிலையில் உறவினர்கள், சுற்றத்தார், நண்பர்கள் என அடங்குவர். இரண்டாம் நிலையில் அறிமுகமாகாதவர்கள் முற்றிலும் நமக்குத் தெரியாதவர்கள். இவ்வாறு யாராக இருந்தாலும் வீடு தேடி வந்தவரை வரவேற்று

*விருந்தளிப்பது உயர்ந்த அறமாகும்.* ***“அறிமுகமானவரும் அறிமுகமாகாதவரும் விருந்தினரே”***[6] *என்று உரக்கச் சொல்வார் பரிமேலழகர். ஆகவே அறிந்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் சிறப்பு செய்தல் அல்லது விருந்து படைத்தல் என்பது இயல்பு. ஆனால், அறியாதவர்களுக்குச் செய்யும் சிறப்பே மேலான விருந்தோம்பல் ஆகும். இவ்வாறு போற்றப்படும் விருந்தோம்பல் என்னும் அறப்பண்பு நாளடைவில் மனித வாழ்வில் குறைந்துகொண்டு வருவதைக் கண்கூடாகப் பார்க்கமுடிகிறது.*

***விருந்தோம்பல்***

*மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றும் அவசியமான அடிப்படைத் தேவைகளாகும்.* ***“வாழ்வின் அடிப்படைத் தேவைகளாவன தண்ணீர், உணவு, உடை, மானம் காக்க வீடு.”***[7] *என்கிறது திருவிவிலியம். இம்மூன்றில் முதல் இடம் பிடிப்பது உணவு ஆகும். அரசன் முதல் ஆண்டிவரை உணவிற்காகத்தான் உழைக்கின்றனர். ஆகவே உணவின் அடிப்படைத் தேவைகளை நன்கு உணர்ந்த நம் முன்னோர்கள் உடல் ஆரோக்கியத்திற்காக நல்ல சத்தான உணவுகளை இயற்கையான முறையில் உண்டு வந்தனர். தாம் உண்பதோடு மட்டும் அல்லாமல் வறுமையில் வாடுபவர்களுக்கும் அருகில் அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளுக்கும் வீடு தேடிவருகின்ற முகம் தெரிந்தவர்களுக்கும் முகம் தெரியாதவர்களுக்கும் முகவரியற்றவர்களுக்கும் முகம் கோணாமல் உணவு அளித்தனர். அவர்கள் உண்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து அதன் பின்னர், உண்ணுதலை முறையாகவும் கடமையாகவும் விருந்தோம்பல் என்னும் அறப்பண்பின் வழியாகக் கடைபிடித்தனர் என்பதற்குத் தொல்காப்பியமும் சங்ககால இலக்கியங்களும் சான்று பகர்கின்றன.*

*இதன் அடிப்படையில் பழங் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் அனைத்திலும் திண்ணைகள் இருந்தன. வீடு தேடி வருபவர்களை அத்திண்ணைகளில் அமரச் செய்து, விருந்தளித்து இளைப்பாறச் செய்தனர். தமிழர்களிடையே உணர்வில் கலந்த ஒன்றாகவும் இல்லறத்தின் ஆணிவேராகவும் விருந்தோம்பல் என்னும் அறப்பண்பு அமைந்திருந்தது. திருவள்ளுவர் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை அறிந்து தனி அதிகாரமே வகுத்துள்ளார். அதேபோல் திருவிவிலியத்திலும் பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு வரை விருந்தோம்பல் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.*

***விருந்தோம்பலுக்கான காரணம்***

*உணவு விடுதிகள் இல்லாத காலத்தில் வெளியூருக்குச் செல்வோர் பல நாட்களுக்கு வேண்டிய உணவுகளைக் கொண்டு செல்ல இயலாது. அதனால் வணிகர்கள் தேர்களிலும் மற்ற ஊர்திகளிலும் பயணிக்கும் போது, உணவிற்குத் தேவையான பொருள்களைக் கொண்டு செல்வார்கள். எனவே, அவர்கள் உணவின்றி வருந்துவோருக்கு உணவளித்தனர். ஆகவே, விருந்தோம்பலுக்கு இதுவே காரணமாக அமைந்தது.* ***“ஈன்ற பசு கன்றிடம் காட்டும் அன்பு போல விருந்தினரிடம் அன்பு காட்டி எலும்பே குளிரும்படியான அன்பால் நெகிழச் செய்து விருந்து படைக்க வேண்டும்”***[8] *என்கிறது பொருநராற்றுப்படை. மேலும் ஒவ்வொருவரும் இல்லறத்தில் பொருள்*

*ஈட்டுவதற்கான காரணம் மற்றவர்களுக்கு உதவிகளைச் செய்யத்தான் என்பதைக் கீழ்க்காணும் குறள் எடுத்துரைக்கிறது.*

**“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**

**வேளாண்மை செய்தற் பொருட்டு.”**[9]

*ஒடோடிப் பொருள் தேடிச் சேர்க்கின்ற ஒவ்வொருவரும் ஒரு பிடிச் சோறு விருந்தாக மற்றவர்களுக்குப் படைக்கின்ற போது தானும் மகிழ்ந்து பிறரும் மகிழ்ந்திருக்க முடியும் என்பதை விருந்தானது நமக்கு நினைவுட்டுகிறது.*

**விருந்தோம்பும் முறை**

*விருந்தோம்பலில் ஒரு வரைமுறை உண்டு என்கிறார் வள்ளுவர். சற்றும் முகம் கோணாமால் வந்த விருந்தினரை வரவேற்க வேண்டும். அதுவே முறையாகும் என்பதற்கு ஒரு மலரை முன்வைத்து உதாரணம் காட்டி விளக்குகிறார்.*

**“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து”**[10]**.**

*என்ற குறளில் அனிச்சம் பூவானது முகர்ந்தவுடன் வாடிவிடக் கூடியது. அதுபோல தமது வீட்டிற்கு வரும் விருந்தினரைச் சற்று முகங்கோணி வரவேற்றால் விருந்தினர் வாடிவிடுவர். எனவே வீடு தேடி வரும் விருந்தினரை முகம் கோணாமல் வரவேற்று விருந்தளிக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிறார். மேலும் வந்த விருந்தினரை உபசரித்து அவர்களை வழியனுப்பி வைத்தபின் மீண்டும் விருந்தினர்கள் வரமாட்டார்களா? எனக்காத்து இருப்போர் அறம் சார்ந்த வாழ்க்கை வாழ்கின்றனர் என்ற கருத்தினையும் தெளிவுபட விளக்கியுள்ளார் வள்ளுவர்.*

**“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**

**நல்விருந்து வானத் தவர்க்கு.”**[11]

*என்ற குறளில் இல்லத்திற்கு வந்த விருந்தினரை வெளியே விட்டுவிட்டு, சாவா அமிர்தமாக இருந்தாலும் தான் மட்டும் உண்ணக்கூடாது என்ற கட்டளையும் விடுக்கிறார் வள்ளுவர்.*

**“விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**

**மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று.”**[12]

*என்ற குறள் எதிர்பாராத விருந்தினர் வந்தாலும் தமது உணவைக் கொடுத்து உபசரிக்க வேண்டுமென்பதே நல்ல விருந்தோம்புதலுக்கான முறை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இறைமகன் இயேசு தன்னைத் தேடி வந்தோருக்கு வயிறார உணவு கொடுத்து வழியனுப்பினார் என்பதை திருவிவிலியம் குறிப்பிடிகிறது.* ***“அனைவரும் வயிறார உண்டனர் மீதியாய் இருந்த துண்டுகளை (அப்பங்கள்) ஏழு கூடைகள் நிறைய எடுத்தனர்.”***[13] *அதேபோல் இறை மகன் இயேசுவும் விருந்திற்காக மரியாள் மார்த்தா வீட்டிற்குச் சென்றிருக்கிறார். அங்கே அவரை வரவேற்று*

விருந்தளிக்க, **“மார்த்தா பற்பல பணிகளைப் புரிவதில் பரபரப்பாக”**[14] இருந்தாள் என்பதை திருவிவிலியம் வழி அறியலாம். ஆகவே மனிதரிடையே விருந்தோம்பல் என்னும் அறப்பண்பு அவசியம் இருக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

**விருந்திற்கு அளவில்லை**

ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு என்பார்கள். ஆனால் அதற்கு எதிர் மாறாக விருந்து படைப்பதற்கு அளவு இல்லை என்கிறார் திருவள்ளுவர்.

**“இணைத்துணைத்து என்பதொன்று இல்லை விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன்.”**[15]

விருந்தினரை உபசரிப்பது என்பதை அளவிட்டுக் கூறமுடியாது. எனவே, விருந்திற்கு அளவு இல்லை என்பதை மேலே குறிப்பிட்ட குறளிலிருந்து அறியமுடிகிறது. அதே வேளையில் செல்வம் இருந்தும் விருந்தினரை உபசரிக்கவில்லை என்றால் அது அவர்களின் முட்டாள்தனம் என்றும் அவர்கள் அறம் சார்ந்து வாழ்வோர் இல்லை என்றும் சாடுகிறார் வள்ளுவர் என்பதை

**“உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவர் கண் உண்டு.”**[16]

என்ற குறள்வழி அறியலாம். எனவே வந்த விருந்தினருக்குக் கிள்ளிக் கொடுக்காமல் அளவில்லாமல் அரைசாண் வயிற்றுக்கு அள்ளிக் கொடுத்து மனித மனங்களைக் குளிரச்செய்வது மனிதனின் மனிதநேயத்தை உயர்த்துகிறது.

**விருந்துண்ணத் தடை**

பொதுவாகப் பகைவரிடத்தில் உணவருந்த யாரும் விரும்புவதில்லை. என்னதான் அவர்களின் வீடுகளில் சுப தினங்கள் நடைபெற்றாலும்கூடப் பேருக்காகத் தலையைக் காட்டிவிட்டு வந்துவிடலாம் என்ற எண்ணம் காலம் காலமாக இருந்துகொண்டுதான் இருக்கிறது என்பதைத் திருவிவிலியம் எடுத்துரைக்கிறது. **“பகை நெஞ்சம் கொண்டோர் படைக்கும் நல்ல இறைச்சி உணவைவிட அன்புள்ளம் உடையவர் அளிக்கும் மரக்கறி உணவே மேல்”**[17] **“சண்டை நடக்கும் வீட்டில் விருந்துண்பதைவிட மன அமைதியோடு பழஞ்சோறு சாப்பிடுவதே மேல்”**[18] என்கிறது திருவிவிலியம் ஆனால் இதே சண்டைகளுடன் சென்றால் உறவுகளில் விரிசல்கள் மென்மேலும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும். ஒரு வகையில் உணவு என்பது பிரிந்து இருக்கும் உறவுகளை ஒன்று சேர்க்கும் பாலமாக அமைகிறது. நீண்ட பகைக்குப்பின் அவ்வீட்டில் உணவு உண்ணும்போதும் வந்தவர்களுக்கு உணவு படைக்கும்போதும் அங்கே மகிழ்ச்சி முளைக்கிறது. இழந்த உறவுநிலை புதுப்பிக்கப்படுகிறது.

**விருந்தோம்பலின் பிரதிபலன்**

*வழக்கமாக மனிதன் வாழ்வில் நல்லது செய்தால், நல்லது நடக்கும் என்ற கருத்து இருந்துகொண்டு இருக்கிறது. இதற்கேற்ப நாள்தோறும் வீடுதேடி வரும் விருந்தினரை அகமும் முகமும் மலர்ந்து நன்கு உபசரித்தால் என்றுமே துன்புறாது இன்பமாக வாழலாம் இத்தகையவரிடத்தில் செல்வம் குறையாமல் செல்வமகள் தங்கி வாழ்வாள் என்பதை,*

***"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை***

***பருவந்து பாழ்படுதல் இன்று."*[19]**

***"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து***

***நல்விருந்து ஓம்புவான் இல்."*[20]**

*போன்ற குறள்கள் வழி அறியலாம் அவரவர் செயல்களைப் பொறுத்துதான் அவர்களை விமர்சனம் செய்கிறார்கள். நல்லதைச் செய்தால் பாராட்டும் வாழ்த்தும் வந்து சேர்கிறது. அதேபோல தீயது செய்தால் இகழ்ந்தும் பேசப்படுகிறது. இதைத்தெளிவுபட விளக்குகிறது திருவிவிலியம்.* ***"தாராளமாக விருந்தோம்புவோரை மனிதர் புகழ்வர். அவர்களுடைய ஈகைக்கு மானிடர் பகரும் சான்று நம்பத்தக்கது."*[21]** *எனவும், தொடக்க நூலில் ஆபிரகாமும் அவரின் மனைவி சாராவும் மூன்று மனிதர்களுக்கு உணவு படைத்தனர் என்பதை அறிய முடிகிறது.* ***"பகலில் வெப்பம் மிகுந்த நேரத்தில் ஆபிரகாம் தம் கூடார வாயிலில் அமர்ந்திருக்கையில் கண்களை உயர்த்திப் பார்த்தார். மூன்று மனிதர்கள் தம் அருகில் நிற்பதைக் கண்டார். அவர்களைக் கண்டவுடன் அவர்களைச் சந்திக்கக் கூடார வாயிலைவிட்டு ஓடினார். அவர்கள் முன் தரை மட்டும் தாழ்ந்து வணங்கி அவர்களை நோக்கி என் தலைவரே உம் கண்களில் எனக்கு அருள் கிடைத்தாயின் நீர் உம் அடியானை விட்டுக் கடந்து போகாதிருப்பீராக. இதோ விரைவில் கொஞ்சம் தண்ணீர்கொண்டு வரட்டும். உங்கள் கால்களைக் கழுவியபின் இம்மரத்தடியில் இளைப்பாறுங்கள். கொஞ்சம் உணவு கொண்டு வருகிறேன். நீங்கள் புத்துணர்வு பெற்றபின் பயணத்தைத் தொடருங்கள். ஏனெனில் உங்கள் அடியானிடமே வந்திருக்கிறீர்கள் என்றார். நீ சொன்னபடியே செய் என்று அவர்கள் பதில் அளித்தார்கள்"*[22].**

*இவ்வாறு ஆபிரகாமும் அவரது மனைவி சாராவும் அம்மூவருக்கு விருந்து படைத்தார்கள். அவ்விருந்தில் வெண்ணெய், பால், சமைத்த இளங்கன்று ஆகிய உணவுப் பண்டங்களிருந்தன. இவ்வாறு விருந்தோம்புதலின் பயனாக, அவர்களின் அருளால் ஆபிரகாமின் மனைவி சாரா வயது முதிர்ந்தவராயும் குழந்தை பாக்கியம் கிடைத்தது. மேலும்* ***"விருந்தை நன்முறையில் நடத்தித் தந்தமைக்காக நீ மணிமுடி பெறுவாய்."*[23]** *எனவே,* ***"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"*[24]** *இது முற்றிலும் உண்மை. இந்த உண்மையைத்தான் புறநானூறு முன்வைத்துப் பேசுகிறது. நம்மை நாடி வருகின்றவர்களுக்கு விருந்தளித்து உபசரித்தல் என்கின்ற அறப்பண்பை மேற்கொள்ள வேண்டும் என்பது அவசியமாகிறது.*

***விருந்தோம்பலில் இயேசு கிறிஸ்து***

*மனிதனுக்கு உணவு அடிப்படைத் தேவை என்பதால் சில இடங்களில் இயேசு உணவுபற்றி குறிப்பிட்ட செய்திகளைக் குறிப்பாகப் புதிய ஏற்பாட்டில் காணமுடிகிறது. தாம் போதித்த*

*போதனைகளைக் கேட்க வந்த மக்களைப் பட்டினியாகத் திரும்பிச் செல்லாதவாறு உணவு கொடுத்தார் என்பதையும் மேலும் இயேசு சில வீடுகளுக்குச் சென்று விருந்துண்டார் என்பதையும் நற்செய்தி நூல்கள் சான்று பகர்கின்றன. இவர் உண்ட ஒவ்வொரு விருந்தும் ஒவ்வொரு செய்தியும் இறையாட்சி விழுமியத்தைப் பறைசாற்றும் செயலாக அமைந்தது எனலாம். சக்கேயுவின் வீட்டில் விருந்துண்டது (லூக் 19:1-10) அவருக்கும் அவரின் வீட்டிற்கும் மீட்பு உண்டாயிற்று என்றும் சக்கேயுவின் மனமானது தீமையிலிருந்து விட்டு விலகியது என்றும் அறியமுடிகிறது. மார்த்தா மரியா வீட்டில் (லூக் 10:38-42) விருந்து உண்டது பெண்களுக்குச் சமூக வாழ்வில் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் சுட்டிக்காட்டுகிறது. லேவியரின் வீட்டில் (மத் 9:10-13) விருந்து உண்டது நீதிமான்களை அல்ல பாவிகளையே அழைக்க வந்தேன் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.*

*இறைமகன் இயேசுவின் உலக வாழ்வில் மட்டுமன்றி அவரின் உயிர்ப்பு வாழ்விலும் உணவானது உயிர்ப்புச் செய்தியாக மாறியது. அதாவது இயேசுவின் மரணத்திற்குப் பிறகு அவரது சீடர்கள் எம்மாவு என்ற ஊருக்குச் செல்லுகின்ற வழியில் உயிர்த்த இயேசுவைக் கண்ட போதும் அவர்கள் இவர்தான் இயேசு என்று அறிந்துகொள்ளாமல் அவரோடு உரையாடிக்கொண்டு செல்கின்றனர். பிறகு மாலை நேரம் ஆயிற்று. இன்று எங்களோடு தங்குங்கள் என்று சீடர்கள் அவரிடம் கூறியதும் அவரும் அன்று தங்கி அவர்களோடு உணவு அருந்தும் நேரத்தில்* **"அப்பத்தை எடுத்ததுக் கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன அவர்களும் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள்"[25].** *இவ்வாறு இறைமகன் இயேசுவின் உயிர்ப்பிக்குப் பிறகும் விருந்துக்கான முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடிகிறது.*

*அதேபோல் இவர்களின் வீடுகளில் இயேசு உணவருந்தியதைக் கண்ட உயர் குலத்தோராகிய சதுசேயர்கள் மற்றும் பரிசேயர்கள் இயேசுவைக் குறை கூறினார்கள். இவர் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டப் பாவிகளோடும் ஆயக்காரர்களோடும் உணவருந்துகிறார் என்று சாடினார்கள். இதையெல்லாம் பொறுத்துக்கொண்ட அவர் இறுதியாகத் தனது உடலையும் இரத்தத்தையும் உணவாக விருந்தாக அளித்தார். இதனையே கிறிஸ்தவ கத்தோலிக்க மதத்தில் நற்கருணை விருந்தாகத் திருப்பலியில் நாள்தோறும் கொண்டாடி மகிழ்ந்து உண்ணுகின்றனர். இத்தகைய விருந்தை ஓர் அருட்சாதனமாகவும் இவ்விருந்தில் பங்குகொள்ள குறிப்பிட்ட வயது வரம்பும் சில முன்தாயாரிப்புகளும் அவசியமாகக் கத்தோலிக்கத் திருச்சபை வலியுறுத்துகிறது. இயேசுவின் உடல் விருந்தாக வழங்கப்படுவதால் அதனை உண்பவர்கள் பெரும் பயன் அடைவார்கள், மீட்பு பெறுவார்கள் என்பதோடு "எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார்"[26] என்பது சான்றாக அமைகிறது. இவ்வாறு விருந்தானது ஒருவர் மேல் ஒருவர் கொண்ட உறவின் அடையாளமாகவும் சகோதரத்துவம், சமாதானம் மற்றும் ஒப்புரவின் அடையாளமாகக் காணப்படுகிறது.*

***இன்றைய விருந்தோம்பல்***

ஒரு காலத்தில் தம் வீட்டில் உணவு இல்லாத நேரத்தில் விருந்தினர் வந்தால் விதைக்காக வைத்திருக்கும் விதைகளைக்கூட உணவாகப் படைத்து மகிழ்வார்கள் என்பதை நம் முன்னோர்களின் அனுபவம் முன்வைக்கிறது. இதற்குச் சான்றாக,

**"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**

***மிச்சல் மிசைவான் புலம்."*[27]**

என்ற குறளைக் குறிப்பிடலாம். இப்பொழுது அதை ஏட்டில்தான் படிக்க முடிகிறது. எச்சக் கையில காக்கா ஓட்ட மாட்டன்றாங்க என்பது மாறி இப்பொழுது வெறுங்கையிலகூட காக்கா ஓட்ட மாட்டாங்க என்ற நிலையாகிவிட்டது. ஏன்? நகரங்களில் பக்கத்து வீட்டில் இறந்து கிடந்தால் கூடக் கேட்பாரற்ற நிலையைக் காணமுடிகிறது. நாள்தோறும் பேருந்துகளிலும் இரயில் வண்டிகளிலும் பயணிக்கின்றோம். நம்மில் பல பேர் பக்கத்தில் யார் அமர்ந்திருக்கிறார்கள் என்றுகூடத் தெரியாமல் கைகளில் செல்போன்களையும் காதுகளில் எட்செட்டையும் மாட்டிக்கொண்டு நடை பிணங்களாகப் பயணிக்கின்றோம். இதில் நாம் எங்கே மற்றவர்களை உபசரிப்பது. அப்படியே சொந்தங்களின் வீடுகளுக்குச் சென்றாலும் மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது போல முக்கலும் முனங்கலுமாகத்தான் அனேக இல்லங்கள் காணப்படுகின்றன.

இன்றைய காலச்சூழலில் பாதுகாப்பிற்காக வீடுகளைச் சுற்றி மதில் சுவர்கள் (சுற்றுச் சுவர்கள்) எழுப்பியும் காவலுக்கு நாய்கள் கட்டி வைக்கப்பட்டுள்ளன. அப்படியே போகவேண்டுமென்றால் அழைப்பு மணிகள் அடிக்கவேண்டும். இல்லறத்தில் பொருளாதார பிரச்சனைகள், இவற்றைச் சமாளிக்க கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் நிலை. வேலையிலிருந்து சோர்வுற்று சோம்பலுற்று வரும்போதே ஒவ்வொரு தெருவுக்கு நாலைந்து பாஸ்புட் கடைகள் இருக்கவே செய்கின்றன. இதனால் சமைக்கவே தேவையில்லை. இதில் எங்கு விருந்து அளிப்பது? பெற்றோருக்கே உணவிட மறுக்கின்ற வேளையில் இதற்கேற்றவாறு ஆங்காங்கே காப்பகங்கள் கட்டப்பட்டுள்ளன. இதற்கிடையில் மற்றவர்களுக்கு எங்கே விருந்து வைப்பது? ஊருக்கு ஊர் மண்டபங்கள் முளைத்துள்ளதால் வீடுகளில் நடக்கும் சுப தினங்களுக்குக் கூட முற்றிப்புள்ளி வைத்தாயிற்று. ஆகவே விருந்தோம்பல் என்கின்ற அறம் அற்றுப் போய்விட்டது எனலாம்.

வளர்ந்து வருகின்ற காலநிலையில் வளர்ச்சி என்பது அவசியம்தான். வேண்டாம் என்று சொல்லவில்லை ஆனால் உறவுகளே இல்லை, உபசரிப்பே இல்லை என்றால் வளர்ந்து என்ன பயன்? காக்கைகளுக்குக் கூட ஒரு பிடிச் சோறு வைத்தால் அவை கரைந்து பகிர்ந்து உண்ணுகின்றன. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே இல்லறத்தின் தலையாய நெறியாகும். விருந்தோம்பல் இல்லாத வாழ்க்கை இல்லறம் ஆகாது. விருந்தோம்பலில் பெண் பெரும் பங்கு வகுக்கிறாள் என்று குறிப்பிட்டுள்ளதை இல்லறங்களில் நடைமுறையாக்க முயற்சியும் பயிற்சியும் செய்வோம். உப்பிட்டவரை உள்ளளவு நினை என்கிறது பழமொழி. மனித உறவுகளுக்கு விருந்து படைத்து அப்படி படைத்தவர்களை உயிர் உள்ளவரை நினைப்போம்.

**இரு நூல்களின் பொருத்தப்பாடு**

திருக்குறளில் விருந்தோம்பலைப்பற்றி ஒரு தனி அதிகாரம் உள்ளது. திருவிவிலியத்தில் அவ்வாறு தனியாக இல்லை. மாறாக, தொடக்க நூல் முதல் திருவெளிப்பாடு நூல் வரை ஒரு சில நூல்களில் விருந்தோம்பலைப்பற்றிய செய்திகளைக் காணமுடிகின்றன. விருந்தோம்பல், விருந்தோம்பலுக்கான காரணங்கள், விருந்தோம்பும் முறை, விருந்தோம்பலின் பிரதிபலன் உள்ளிட்ட செய்திகள் இரு நூல்களிலுமே காணப்படுகின்றன. திருவிவிலியத்தில் உடலுக்கான உணவு மற்றும் விருந்து என்பதைத்தாண்டி ஆன்மீகத்திற்கான விருந்தாக இயேசு தன்னையே நற்கணை வழியாக அளித்தார் என்பதை அறியமுடிகிறது. மேலும் இதுபோன்ற செய்திகள் ஆழமாகக் காணப்படுகின்றன.

**மதிப்பீடு**

- ஒத்த அன்புடைய ஓர் ஆணும் பெண்ணும் அறத்துடன் கூடி வாழும் வாழ்க்கை இல்லறம் எனப்படும்.
- ‘உணவு’, ‘விருந்து’ என்ற இரண்டு சொற்கள் உணவைக் குறித்தாலும் இந்த இரண்டு சொற்களுக்குச் சற்று வேறுபாடு உண்டு. உணவு என்பது உணவு பசிக்கு உண்பது, தனித்தும் உண்ணலாம். ஆனால், விருந்து என்பதைச் சேர்ந்து உண்பது. பிறரோடு பகிர்ந்து உண்பது எனலாம். இதனால் மனித உறவுகள் வலுவடைகிறது.
- அறிந்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் சிறப்பு செய்தல் அல்லது விருந்து படைத்தல் என்பது இயல்பு. ஆனால், அறியாதவர்களுக்குச் செய்யும் சிறப்பே மேலான விருந்தோம்பல் ஆகும்.
- வீடு தேடி வந்த விருந்தினருக்குக் கிள்ளிக் கொடுக்காமல் அளவில்லாமல் அரைசாண் வயிற்றுக்கு அள்ளிக் கொடுத்து மனித மனங்களைக் குளிரச்செய்வது மனிதனின் மனிதநேயத்தை உயர்த்துகிறது.
- ஒரு வகையில் உணவு என்பது பிரிந்து இருக்கும் உறவுகளை ஒன்று சேர்க்கும் பாலமாக அமைகிறது. நீண்ட பகைக்குப்பின் அவ்வீட்டில் உணவு உண்ணும்போதும் வந்தவர்களுக்கு உணவு படைக்கும்போதும் அங்கே மகிழ்ச்சி முளைக்கிறது. இழந்த உறவுநிலை புதுப்பிக்கப்படுகிறது.
- திருவிவிலியத்தில் உடலுக்கான உணவு மற்றும் விருந்து என்பதைத்தாண்டி ஆன்மீகத்திற்கான விருந்தாக இயேசு தன்னையே நற்கணை வழியாக அளித்தார் என்பதை அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.33.
2. தொடக்கநூல், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப.5.
3. திருத்தூதர் மத்தேயு, திருவிவிலியம், புதிய ஏற்பாடு, மத்தேயு நற்செய்தி, ப.32.
4. இராஜசேகரன், தமிழர் வாழ்வியல் பெருமைகள், ப.86.
5. அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரீகமும் பண்பாடும், ப.65.
6. மேலது, ப.65.

7. திருவிவிலியம், பழைய ஏற்பாடு, சீராக் ஞானம், ப.1280.
8. ச.வே. சுப்பிரமணியன், சங்க இலக்கியம் பத்துபாட்டு மூலமும் தெளிவுரையும், பொரு. ப.121.
9. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.47.
10. மேலது, ப.50.
11. மேலது, ப.48.
12. மேலது, ப.47.
13. திருத்தூதர் மாற்கு, திருவிவிலியம், புதிய ஏற்பாடு, மாற்கு நற்செய்தி, ப.64.
14. திருத்தூதர் லூக்கா, திருவிவிலியம், புதிய ஏற்பாடு, லூக்கா நற்செய்தி, ப.104.
15. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.49.
16. மேலது, ப.49.
17. திருவிவிலியம், பழைய ஏற்பாடு, நீதிமொழிகள், ப.760.
18. மேலது, ப.761.
19. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழர் உரை, ப.47.
20. மேலது, ப.48.
21. திருவிவிலியம், பழைய ஏற்பாடு, சீராக் ஞானம், ப.1280.
22. திருவிவிலியம், பழைய ஏற்பாடு, தொடக்க நூல், ப.19.
23. திருவிவிலியம், பழைய ஏற்பாடு, சீராக் ஞானம், ப.1280.
24. ஞா. மாணிக்கவாசகன், புறநானூறு மூலமும் உரையும், ப.31.
25. மேலது, ப.48.
26. திருத்தூதர் யோவான், திருவிவிலியம், புதிய ஏற்பாடு, யோவான் நற்செய்தி, ப.143.
27. புலியூர்க் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.48.